THE NEW INDIAN EXPRESS

# Tele-MANAS mental health services flagged off at JIPMER

**EXPRESS NEWS SERVICE** @ Puducherry

TELE-MANAS (Tele Mental Health Assistance and Networking Across States) programme at JIPMER, aimed at improving the quality of mental health services in the region was inaugurated by JIPMER director, Dr Rakesh Aggarwal, on Thursday

According to an official release, in India, approximately one in every ten people has mental health issues, and nearly 1% of the population suffers from severe mental illness. In comparison, there are only a handful of mental health experts in India, their services hard to access and limited to metropolitan centres. Consequently, most people stay away from mental health services. To remedy this situation and improve the quality of mental health services available to people across the country, Ministry of Health and Family Welfare, Government of India, launched a dedicated toll-free mental health helpline 14416 (Tele-MANAS) last year, covering all Indian states and UTs.

Dr Aggarwal stated that JIPMER will have play the key role of a mentoring institute for two union territories, namely Andaman & Nicobar and Puducherry. Experts trained at JIPMER will act as the first point of contact for people in need of mental health services, with the helpline operational 24x7 all year round. The helpline will be beneficial to people staying in areas that lack proper facilities and acts as a reliable source of care and counselling, even referring to more advanced facilities for those who may require them.

இந்து தமிழ் திசை 2 CHENNAI வியாழன், அக்டோபர் 12, 2023

புதுச்சேரி, அந்தமான் பகுதிகளுக்கு

# ஜிப்மரின் 'டெலி - மனஸ்' மனநல சேவை தொடக்கம்

● புதுச்சேரி

புதுச்சேரி, அந்தமானுக்கு 'டெலி – மனஸ்' என்ற தொலைபேசி மூலம் அளிக்கும் மனநல சேவையை ஜிப்மர் மருத்துவமனை நிர்வாகம் தொடங்கியுள்ளது.

இச்சேவையை ஜிப்மர் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் ராகேஷ் அகர்வால் நேற்று தொடங்கி வைத்தார். இச்சேவை தொடர்பாக அவர் கூறியதாவது:

இந்தியாவில் 10–ல் ஒருவருக்கு மனநல பாதிப்பு உள்ளது. ஒரு சதவீதம் மக்களுக்கு தீவிர மனநல பாதிப்பு உள்ளது. மனநல மருத்துவர்கள் குறைவாக உள்ள காரணத்தினாலும், அதிக மனநல வல்லுநர்கள் பெரு நகரங்களில் இருப்பதாலும் இச்சேவையை பெறுவதில் சிரமம் உள்ளது.

தூக்கமின்மை, தேர்வு பயம், போதை பழக்கம், மனக்கவலை போன்ற உளவியல் பிரச்சினைகளுக்கு யாரிடம் உதவி பெறுவது என்பதில் குழப்பம் உள்ளது. இதற்கான தனிப்பட்ட இலவச தொலைபேசி மனநல ஆலோசனை எண் 14416 (டெலி–மனஸ்), இந்திய அளவில் கடந்தாண்டு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் வாயிலாக நிறுவப்பட்டது.



மேலும், இச்சேவை இந்திய மக்களின் மனநலத்தை மேம்படுத்த உதவும்.

புதுச்சேரி மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகளுக்கு இதற்கான ஆலோசனை நிறுவனமாக ஜிப்மர் மருத்துவமனை திகழும். இச்சேவை விடுமுறை நாட்கள் உட்பட 24 மணிநேரமும் வாரத்தில் அனைத்து நாட்களிலும் இயங்கும். தேர்வு பெற்ற ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கவும் மேலும் உயர் நிறுவனங்களுக்கு சிகிச்சைக்கு பரித்துரை செய்யவும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. ஜிப்மர் மருத்துவமனை இச்சேவையை முழுவீச்சில் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ஆதலால் இப்பகுதி மக்களின் 'மனநலம்' மேம்படும் என எதிர்பாக்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
12.10.2023 (வியாழக்கிழமை)

# ஜிப்மரில் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனை தொடக்கம்

புதுச்சேரி, அக்.12-

இந்தியாவில் ஒரு சதவீதம் பேருக்கு தீவிர மனநல பாதிப்பு உள்ளது. மனநல மருத்துவர்கள் குறைவாக உள்ளதால் இச்சேவையை பெறுவதில் சிரமம் உள்ளது. தூக்கமின்மை, தேர்வுபயம், போதைப்பழக்கம், மனக்கவலை போன்ற உளவியல் பிரச்சினைகளுக்கு யாரிடம் உதவி பெறுவது என்பதில் குழப்பம் உள்ளது. இதற்காக பிரத்தியேகமான இலவச தொலைபேசி மனநல ஆலோசனை எண் 14416 (டெலி-மனஸ்) இந்திய அளவில் கடந்த வருடம் சுகாதாரத்துறை மூலம் நிறுவப்பட்டது. இந்த சேவையை ஜிப்மரில் இயக்குனர் ராகேஷ் அகர்வால் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் பலரும் கலந்து கொண்டனர். இந்த சேவை விடுமுறை நாட்கள் உள்பட 24 மணி நேரமும் வாரத்தில் அனைத்து நாட்களிலும் கிடைக்கும். தேர்வு பெற்ற ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கவும், மேலும் உயர் நிறுவனங்களுக்கு சிகிச்சைக்கு பரிந்துரை செய்யவும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

தினமலர்

# மனநல ஆலோசனை வழங்க ஜிப்மர் மருத்துவமனை தேர்வு

**புதுச்சேரி,அக்,12–**

புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு, மனநல ஆலோசனை நிறுவனமாக ஜிப்மர் மருத்துவமனை செயல்பட உள்ளது.

இந்தியாவில் பத்து பேரில் ஒருவருக்கு மனநல பாதிப்பு உள்ளது. மனநல மருத்துவர்கள் குறைவாக உள்ளதாலும், அவர்கள் அதிகம் பெரு நகரங்களில் இருப்பதாலும் சேவையை பெறுவதில் சிரமம் உள்ளது.

எனவே, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் தூக்கமின்மை, தேர்வு பயம், போதை பழக்கம், மனக்கவலை போன்ற உளவியல் பிரச்னைகளுக்காக ஆலோசனை பெற, 14416 என்ற எண்ணை அறிமுகப் படுத்தியுள்ளது.

ஜிப்மர் மருத்துவமனை இச்சேவையை வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.ஜிப்மரில் மனநல ஆலோசனை சேவையை 'டெலிமனஸ்' என்ற பெயரில் இயக்குநர் ராகேஷ் அகர்வால் துவக்கி வைத்து பேசியதாவது:

புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவு பகுதிகளுக்கு, ஜிப்மர் ஆலோசனை நிறுவனமாக திகழும். இச்சேவை விடுமுறை நாட்கள் உள்பட 24 மணி நேரமும் அனைத்து நாட்களிலும் இயங்கும். தேர்வு செய்யப்பட்ட ஆலோசகர்கள் ஆலோசனை வழங்குவர். தேவையான நபர்களை உயர் நிறுவனங்களில் சிகிச்சைக்கு பரிந்துரை செய்யவும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.

மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்களுடன் கலந்துரையாடினர்.